SINGLE COPY : Rs.5/- ANNUAL SUBSCRIPTION : Rs.50/-

# LinkAge

(R.O.) New No.90, Rama Naicken Street, Nungambakkam, Chennai 600 034.

A Monthly Journal for Service and Advocacy to all Age Groups, by Senior Citizens Bureau

Committed to serve

Bestow unconditional love

VOLUME : 12 DECEMBER : 2015 ISSUE : 05

## *From the Editor cum Chairman*

### இயற்கையைப் போற்றுவோம்

இவ்வாண்டு தீப ஒளி திருநாளுக்கு முன்னர், அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் தொடங்கிய பருவ மழை விட்டு விட்டும், தொடர்ந்தும், மாத இறுதியில் விடாமலும், அளவுக்கு அதிகமாக (ஏறத்தாழ 48 செ.மீ.) பொழிந்தது. பல ஆண்டுகளாக பராமரிப்பற்றுக் கிடந்த குளம், குட்டை, கண்மாய், ஏரி, ஓடை, கால்வாய், சிற்றாறு, பெரியாறு முதலானவை தாங்க முடியாமல் தத்தளித்து பொங்கி எழுந்தன.

இந் நிலை அரசயையும், பொது மக்களையும் கண் அயர முடியாமல் விழி பிதுங்க செய்தது. அனைத்து மாவட்டங்களையும் தட்டி எழுப்பியது. சரியான பாடம் புகட்டியது. சென்னை பெருநகரம் முழுவதும் தண்ணீரில் மிதக்கிறது.

தங்களை ஒதுக்குவதும், ஒடுக்குவதும், புறக்கணிப்பதும் எவ்வளவு ஆபத்தானவை என்பதை அவை புரிய வைத்தன. இன்னும் சில ஆண்டுகளாவது அரசும், பொது மக்களும் மறக்க மாட்டார்கள். இப்போது பாழாய்ப்போன கட்டமைப்புகளும், சீரழிந்த மக்களும் மீள வேண்டும் அல்லவா? இதற்காக யாவரும் கூட்டாகக் கை கோர்த்து ஆவதைச் செய்வோம், இழந்ததை மீட்டுக் கொடுத்து வரும் முன் காப்போம். இயற்கையை எதிர்த்து எவரும் வெல்ல முடியாது, இயற்கையோடு இணைந்து போற்றி வழிபடுவோம்.

**மீட்புப் பணிக்கு பெயர் கொடுப்பீர், நிவாரண நிதி தருவீர்.** ❖

### CANCELLED

As a part of World Elders Day - 2015 series, the workshop arranged jointly with Tamil Nadu Police at Kilpakkam Police Station, on 19.12.15, on the subject "Tamil Nadu Maintenance of Parents and Senior Citizens Act 2009" stands cancelled, due to disruption of normal life on account of devastation caused by furious rain. ***Please enroll your name and donate for relief work.***

***05.12.15*** ***Dr. (Capt.) M. Singaraja***❖

### ‘‘முதியோர்களை இணைத்து உறுதி செய்க’’ - உலக முதியோர் நாள் கருப்பொருள் உரை

அனைவருக்கும் வணக்கம். Good Morning to everybody.

மேன்மை தங்கிய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. B. வளர்மதி அவர்கள் தலைமை விருந்தினராக வந்து நம்மை பெருமைப்படுத்தியுள்ளார்கள். நாம் 20 ஆண்டுகளாக உலக முதியோர் நாள் விழா எடுத்து வருகிறோம். அதில் மத்திய அமைச்சர்களும் மாநில அமைச்சர்களும் கலந்து கொண்டுள்ளார்கள். இன்று தான் (07.11.2015) முதன் முதலாக சமூக நலத்துறை அமைச்சர் கலந்து கொள்ளும் நல்ல வாய்ப்பைப் பெற்றுள்ளோம். இதன் மூலம் மூத்த குடிமக்கள் பால் நீங்கள் காட்டும் பரிவும் பாசமும் மதிப்பும் மரியாதையும் வெளிப்படுகிறது. எங்களுக்கு மிகவும் பெருமிதமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. இதற்காக எங்கள் மன்றத்தின் சார்பாகவும் எனது சார்பாகவும் அன்பு கலந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரிய வாய்ப்பு எப்படி சாத்தியமானது? மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. JCD பிரபாகர் அவர்களது தந்தையாரும் நமது பொதுச் செயலாளர் திரு. S. ஜெயகுமார் அவர்களும் ஒன்றாக டன்லப் கம்பெனியில் பணி ஆற்றியவர்கள், குடும்ப நண்பர்கள். திரு. JCD அவர்கள் சிறு வயது முதல் நன்கு பழக்கப்பட்டவர். குடும்ப விழாக்களில் தவறாது பங்கு கொள்வோதோடு சரி. அவரது பண்பு, அன்பு, மரியாதையின் அடையாளமாக முதன் முறையாக இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இவரது இனிய குணநலத்தைப் பாராட்டி எங்களது அன்பான வணக்கத்தையும் நன்றியையும் அவருக்கு உரித்தாக்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறோம்.

இன்று நேற்று அல்ல. தொடர்ந்து 4 ஆண்டுகளாக உலக முதியோர் நல விழா, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. இது எப்படி முடியும்? பாரம்பரியமிக்க எத்திராஜ் குடும்பத்தினரால் 60 ஆண்டுகளாக நிர்வகிக்கப்படுகிற முன்னணிக் கல்லூரியின் அறக்கட்டளைத் தலைவர், இளைஞர், அறிஞர், உயர்திரு V.M. முரளிதரன் அவர்களும், துடிப்பு மிக்க ஆற்றல் நிறைந்த கல்லூரி முதல்வர், பேராசிரியர் டாக்டர் A. நிர்மலா அவர்களும் மூத்த குடிமக்களிடம் கொண்டுள்ள பரிவும் பாசமும் மதிப்பும் மரியாதையும் தான். அவர்கள் சமூக நலத்திற்கும் குடும்பப் பண்புக்கும் முக்கியத்துவம் கொடுத்து, வயதானவர்களை ஒதுக்காமல் அரவணைத்துச் செல்லும் பாங்கு போற்றுதலுக்குரியது. மேலும் இது ஆசிரியப் பெருமக்களுக்கும் மாணவச் செல்வங்களுக்கும் வழிகாட்டியாகவும், ஊக்கப்படுத்துவதாகவும் அமைகிறதல்லவா? எனவே தான் இம் மாபெரும் அரங்கில் நாட்டு நலன் திட்ட நிர்வாகிகளான Dr. R. இராஜலட்சுமி, Dr. K. நவநீதலட்சுமி, Dr. C. பிரபாவதி, திருமதி R.A. காயத்ரி சுவேதாகுமார் ஆகிய ஆசிரியப் பெருமக்களும், நூற்றுக் கணக்கான மாணவச் செல்வங்களும் ஆர்வத்தோடு குழுமியுள்ளீர்கள். Dr. R. இராஜலட்சுமி அவர்கள் தொடர்ந்து பல்லாண்டுகளாக எங்களுக்கு ஊன்றுகோலாக இருந்து தலைமுறை இணைப்புக்கு ஊக்குவித்து எல்லோரையும் ஒருங்கிணைத்து வருகிறார்கள். அவர்களது பணி நிறைவு மென்மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன். எங்களது முயற்சிக்கு ஆதரவு கொடுத்து இதை நடத்திக் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்து வாழ்த்தி வணங்குகிறேன்.



நான் இதுகாறும் குறிப்பிடும்போதெல்லாம் மாண்புமிகு அமைச்சர் முதல் நீங்கள் யாவரும் எப்படி எங்களை அரவணைத்து இணைத்துள்ளீர்கள் என்பதைக் கோடிட்டு காட்டியிருக்கிறேன். இவ்வாண்டு உலக முதியோர் நாளுக்கு உலக நாடுகள் அவை UNO அமைத்துள்ள கருப்பொருள் ‘‘முதியோர்களை இணைத்து உறுதி செய்யும் நகர்ப்புற கழல்’’ என்பதாகும். ஆங்கிலத்தில் "Sustainability and Age Inclusiveness in Urban Environment" என்று சொல்லப்படுகிறது.

முதியோர்களைப் புறந்தள்ளாமலும் ஒதுக்காமலும் அவர்களுக்கு உரிய சமமான இடம் கொடுக்க வேண்டும், அவர்கள் மேன்மையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தாகும். இதில் நான் முனைப்புடன் இம்மன்றத்தில் வாயிலாகவும், நான் ஈடுபட்டுள்ள மற்ற மூத்த குடிமக்கள் நல அமைப்புகள் மூலமாகவும் 20 ஆண்டுகளாக உழைத்து வருகிறேன். முன்னோடியாகவும் இருந்து வருகிறேன். மூத்த குடிமக்கள் இயக்கமானது பரவலாகி வருகிறது. அவர்களது குரலும், செய்தியும் மெல்ல எழத் தொடங்கியுள்ளது. அவர்களை மையப்படுத்தி இல்லங்களும், மருத்துவமனைகளும், துணைவிக் கருவிகளும் வரத் தொடங்கியுள்ளன. அதே சமயத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள உலக மயமாகுதல் தாக்கத்தின் காரணமாக நுகர் பொருள் திணிப்பு, அவசர கோல துரித நாகரிகம், தான் தனது என்ற சுகபோகப் பொருள் மோகம் அதிகரித்து வருகிறது. இதனால் என்ன ஆயிற்று? என்று கேட்டால், அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் மூத்த குடிமக்கள். அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் தீங்குகள், அவமரியாதைகள், தனிமைப்படுத்துதல், ஒதுக்குதல், சொத்து அபகரிக்கப்படுதல், கொலை, கொள்ளை, விபத்துகள் விபரீதங்கள், முதலானவை சர்வ சாதாரணமாக நடந்து வருகின்றன.

இவற்றைத் தடுப்பதற்காக மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கு இணங்க தமிழக அரசும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பும் சட்டம் மற்றும் விதிமுறையை வகுத்துள்ளார்கள். இது ஓர் அரிய பாதுகாப்புக் கவசம். இது 2009-இல் அரசாணையாக்கப்பட்டுள்ளது. இதைப் போன்று மூத்த குடிமக்களை ஒதுக்காமல் அவர்களை அரவணைத்துச் செல்லும் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி J. ஜெயலலிதா அவர்கள் சமூக நலத்திட்டங்களில் முன்னோடி மாநிலமாகத் திகழும் நமது மாநிலத்துக்கு பல புதிய புரட்சிகரமான திட்டங்களை மூத்த குடிமக்களுக்காக வழங்கியுள்ளார்கள். முதியோர் ஓய்வு ஊதியத் தொகையை ரூ.1,000/- ஆக உயர்த்தியது. மாவட்டந்தோறும் ஒருங்கிணைந்த முதியோர் இல்லங்கள் அமைப்பது, மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதியோர்நலச் சிறப்புப் பிரிவு ஏற்படுத்துவது, என்பவை முத்தாய்ப்பானவை.

இதற்காக அம்மா அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் பாராட்டுதலையும் வாழ்த்தையும் நன்றி கலந்த வணக்கத்தையும் மூத்த குடிமக்கள் மன்றத்தின் சார்பாகவும் எனது சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். இதே தருணத்தில் சில கோரிக்கைகளையும் தங்கள் மேலான பார்வைக்கு வைக்கிறேன்.

## I) செலவில்லாதவை

1) அரசின் எந்த அலுவலகமானாலும் சேவை மையமானாலும் முதியோர்களைப் புன்முறுவலுடன் வரவேற்று இருக்கை கொடுத்து, காது கொடுத்து கவனிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும்.

2) முதியோர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அரசு கட்டுப்பாட்டிலுள்ள ரேசன் கடை, சார் பதிவாளர் போன்ற எல்லா மையங்களிலும் தனியார் மருத்துவமனைகள் உட்பட எல்லா தனியார் சேவைஅலுவலகங்களிலும் தனி வரிசையின் மூலம் விரைந்து உதவ ஆணை பிறப்பிக்க வேண்டும்.

3) அனுபவமிக்க புகழ் பெற்ற மூத்த வல்லுநர்கள் சமுதாயத்தின் சொத்து. அவர்களைப் பராமரித்துப் போற்றும் வகையில் அவர்களுடைய ஆலோசனையை எழுத்து மூலமாக வரவேற்று அனைத்துத் துறைகளிலும் பரிசீலிக்க வேண்டும். தமிழக அரசின் திட்ட ஆலோசனை ஆணையம் எடுத்துக் காட்டாக இருப்பதுபோல் அனைத்துத் துறைகளும் திகழ வேண்டும்.

4) ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ள பராமரிப்புச் சட்ட ஆணையை முழுமையாக, காவல் நிலையங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் உயிரோட்டத்துடன் செயல்பட வேண்டும். இதற்குத் தேவையான உதவிக்காக மூத்த குடிமக்கள் அமைப்புகளை பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக அலுவலகங்களுக்கும் பொது மக்களுக்கும் பராமரிப்பு சட்டத்தைப் பற்றி பரவலாக்குவது, முதியோர் இல்லங்களைக் கண்காணிப்பது, விதிகளை அமுல்படுத்துவதற்கு முதியோர் சங்கங்களை ஈடுபடுத்துவது.

5) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒருங்கிணைந்த முதியோர் இல்லங்களை விடுபட்ட மாவட்டங்களில் ஏற்படுத்தவும், அதேபோன்று முதுமை நல சிறப்பு பிரிவுகளை விடுபட்ட மருத்துவக் கல்லூரி, மருத்துவமனைகளில் அமுல்படுத்துதல்.

6) உலக முதியோர் நாளை எல்லா பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அனுசரிக்க வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்க வேண்டும்.

7) பல்கலைக் கழகங்களில் எல்லாத் துறைகளிலும் முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கு வயது வரம்பில்லாமல் முதியோர்களும் சேர்ந்து படிப்பதற்கு அரசாணை பிறப்பிக்க வேண்டும்.

## II) குறைந்த செலவுக்கு உட்பட்டவை:

1) முதல் கட்டமாக நகரப் பேருந்துகளில் ஒரு நாள் பயணத்திற்குரிய கட்டணத்தை இலவசமாக்குவது.

2) அருங்காட்சியகம், உயிரியல் பூங்கா, கலைக் கூடம் முதலானவற்றுக்கு கட்டணமில்லாமல் அனுமதிப்பது.

3) அரசு மருத்துவமனைகளில் முதியோருக்கு வருமுன் காப்போம் சிறப்பு முகாமை நடத்துவது.

4) தமிழ்நாடு மாநில முதியோர் கொள்கையை விரைந்து அறிவிப்பது. இது மாநில திட்டக்குழுவின் பரிசீலனையில் உள்ளது. இதுபற்றி கருத்து பரிமாற எனக்கு அழைப்பு வந்தது.

5) முதமைச்சர் காப்பீடு திட்டத்தை அனைத்து தரப்பு முதியோருக்கும் விரிவுபடுத்துதல்.

6) முதியோர் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

7) கூட்டுறவு வங்கிகள், மாநில கடன் பத்திரங்கள், மாநில நிதி மற்றும் போக்குவரத்து கழக வைப்பு நிதிகளில் முதியோருக்கு 2 சதவிகிதம் கூடுதல் வட்டி வழங்குதல்.

8) சமூக நலத்துறைக்கு மட்டும் ஒரு தனி அமைச்சரை நியமித்தல்.

9) முதியோர்களுக்கான பிரச்சனைகளை தீர்க்க மக்கள் நல்வாழ்வு, போக்குவரத்து, நிதித் துறை போன்ற துறைகள் சம்பந்தப்பட்ட செயலாளர் மட்டத்தில் அதிகாரிகள் கொண்ட ஒருங்கிணைப்பு குழுவை சமூக நலத்துறை மூலமாக அமைத்தல்.

10) முதியோர் மற்றும் சமூக பிரச்சனைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தீர்வு காண மகளிர் காவல் நிலையங்களுக்கு மாற்றி விரிவாக்கம் செய்தல்.

இதுபோன்ற சின்னஞ்சிறிய காரியங்களுக்கு ஊன்றுகோலாக பரிவுடன் தீர்வு காண தாய் உள்ளங்களுக்கு தனிக் கரிசனம் உண்டு. எனவே, மதிப்பிற்குரிய அம்மா அவர்களின் பார்வைக்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் முன் வைக்கிறோம்.

இப்பொன்னாளில் வந்து பெருமை சேர்த்து சிறப்பித்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினருக்கும், 90 வயதை தாண்டிய மன்றப் பெரியவர்களுக்கும், மாணவச் செல்வங்களையும், மூத்த குடிமக்களையும் இணைக்கும் பாலமாக சிறந்து திகழும் எத்திராஜ் கல்லூரிக்கும், வந்துள்ள உங்கள் அனைவருக்கும் மீண்டும் தலைவணங்கி விடை பெறுகிறேன். நன்றி! வணக்கம்.❖

## *SCB - 181st programme –Condolence Meeting for Founding Chairman and Chairman Emeritus, Major General Aban Naidu, PVSM, AVSM, M-in-D - 22.11.2015*



Floral Tribute to Maj. Gen. Aban Naidu, PVSM, AVSM, M-in-D



A View of the dias (L-R) S. Jayakumar, Hari Naidu, Dr. Capt. M. Singaraja, Dr. VS. Natarajan, VijiNaidu, Prakash H Lulla

With a cool breeze and over cast sky, the memorial meeting started at 10.30 am, at AHS premises, Kilpauk. The photo gallery of General sahib in the last public attendance at Stella Maris College (SMC), on 01.10.2010, during WED celebration, organized by SCB jointly with SMC, was displayed on LCD Screen. Mrs. VijayaLakshmi Daljit, the elder daughter of the late Maj. Gen. Aban Naidu lighted the lamp. The family members of late Gen. Aban, the office bearers and the members of the Bureau paid floral tribute to his portrait kept and decorated in the dais. 2 minutes silence was then observed as a mark of respect to the departed leader.

Later Dr. Capt. M. Singaraja, the Chairman, spoke very touchingly of the role played by General sahib from the inception of SCB till date. He cited memorable occasions of his involvement in nurturing the Bureau and in displaying human values. **Gen. Aban was a role model true to the logo of SCB, he designed with inscription "Committed to Serve" and "Light of Hope".** He invited the attention of all the members to our monthly journal “LinkAge” published in Oct 2014 and Nov 2015 where a great deal of General Aban is brought out. He will remain in our hearts forever. The citation of the “Award of Excellence” conferred on him on 7.10.15, at the Ethiraj College, during World Elders Day, was read out by the Vice Chairman, Mr. Prakash H Lulla. Padmasri Dr V.S. Natrajan, our Immediate Past Chairman and renowned Geriatrician eloquently spoke of General sahib inaugurating our Geriatric House Call Project, in 2008 and his hospitality. The former Sec. Gen. both Er. S. Murugaiyan and Brig K. Muthulaxmi recalled their happy moments with General Aban. EC member Mr. K. Sundara Varadan paid glorious tribute. In response, his son Er. Hari Naidu and daughter Mrs. Vijaylakshmi brought very fond memories of a caring father, compassion and valor. They profusely thanked the Bureau and its Chairman for inviting all the family members to this well organized meeting. Sec. Gen. Mr. S. Jayakumar proposed a vote of thanks and invited the large gathering assembled to join for tea. ❖

## *SCB – 182nd programme - Camp on Hearing Loss Assessment - 22.11.2015*



Hearing ability test



Audiogram - Testing



A section of the participants

Senior Citizens Bureau (SCB) jointly with Aanvii Hearing Solutions (AHS), Kilpauk, conducted a free camp on 22.11.2015, from 11.30 to 16.30 hrs. to assess Hearing Loss and to give solutions. Dr. Ranjana Gupta, MD, ENT specialist, Mr. Khwaja, Audiologist and Mr. Vijay Amarnath, Zonal Sales Manager, Siemens made presentation and explained the Best Sound Technology and evolution of hearing aids from mere amplifiers to today's smart machines and answered questions satisfying every query. Hearing screening was done after lunch. Around 40 Senior Citizens benefited from the hearing camp by knowing their hearing status. Mr.Ganesh Balaji, Audiologist conducted hearing assessment and gave hearing aid trial.

Mr. Mehul of AHS, in his thanks giving speech had shown his commitment towards the society. He expressed his preparedness to hold such camps for other organizations also. Rain clouds away till 5 pm, soon came pouring to bless the day with copious shower. The AHS had taken great pains to make the venue comfortable, with love and regard.

*Aanvii Hearing Solutions offers testing for all the other members and their spouses of Senior Citizens Bureau, who were unable to attend the camp. AHS extends home visit for members who could not come out of their homes due to medical reasons. Special 15% discount is offered to the members of the Bureau who purchased hearing aid on that day and following week. All the members of the Bureau can also avail the benefits.* ❖

**EC Meeting for the month of November 2015** was chaired by Dr. (Capt.) M. Singaraja. One minute silence was observed to condole the death of Tmt. Sundari Bai, LM: 602, (81), recent flood victims in Tamil Nadu and terror victims in France. The Minutes of the last meeting held on 05.10.2015 was read and confirmed. November born members as well as new members were warmly greeted. Then the Chairman gave an over view of the past programs and forth coming programs. After the discussion and vote of thanks by Sec. Gen. Jayakumar, the curtain came down with all members singing the national anthem. ❖

Registered with Registrar of Newspapers for India No.TN/ENG/2004/13996 Date of Publication 5th of Every Month
Postal Regn. TN/CH(C)/37/2013-2015 and Licenced to post w/o prepayment WPP No.TN/PMG(CCR) WPP/41/13-15

## Birthdays : December

Wishing you a Cheerful, Peaceful and Prosperous Life. God bless you

| Sl. No. | D.O.B | Memb No. | Name (Thiru / Tmt.) |
|---|---|---|---|
| 1. | 01-12-1942 | LM 604 | Dr. N. Rajagopalan |
| 2. | 02-12-1946 | LM 788 | Cdr. M.D. Menon |
| 3. | 03-12-1931 | LM 363 | S. Aravamudachary |
| 4. | 03-12-1933 | LM 426 | S. Sakuntala |
| 5. | 05-12-1948 | LM 689 | Dr. Lalitha Govindan |
| 6. | 07-12-1946 | LM 605 | V. Lakshmi Narayanan |
| 7. | 07-12-1939 | LM 659 | Dr. K. Sampath Kumar |
| 8. | 12-12-1941 | LM 481 | K. Sathyanarayanan |
| 9. | 13-12-1936 | LM 791 | R. Ramakrishnan |
| 10. | 14-12-1931 | AM 507 | A. Kanthimathinathan |
| 11. | 18-12-1940 | LM 724 | Er. L. Venkatraman |
| 12. | 19-12-1940 | LM 912 | Pramila Ethiraj |
| 13. | 20-12-1939 | LM 87 | Er. S.P. Rajah |
| 14. | 22-12-1965 | LM 568 | Dr. Neela Patel C/o. Vipanachee |
| 15. | 23-12-1940 | LM 257 | Capt. N. Krishnamurthy |
| 17. | 25-12-1943 | LM 777 | M. Murahari |
| 18. | 30-12-1950 | LM 742 | A. Balakrishnan |

***Your liberal contribution to Sunshine Fund is solicited*** ❖

## National / International Days December

| | | |
|---|---|---|
| 01-12 | World AIDS Day | I |
| 02-12 | International Day For the Abolition of Slavery | I |
| 03-12 | World Disabled Day | I |
| 04-12 | Chemical Accidents Prevention Day | N |
| 04-12 | Navy Day | N |
| 05-12 | International Volunteers Day | I |
| 07-12 | International Civil Aviation Day | I |
| 07-12 | Armed Forces Flag Day | N |
| 09-12 | Girl Child Day | N |
| 10-12 | International Human Rights Day | I |
| 11-12 | World Children's Fund Day | I |
| 11-12 | World Asthma Day | I |
| 14-12 | National Energy Conservation Day | N |
| 14-12 | Liberation Day of Goa | N |
| 23-12 | Kisan Divas ( Birthday Charan Singh) | N |
| 25-12 | X -mas Day | I |
| 26-12 | Central Reserve Police (CRPF) Foundation Day | N |

Note : N = National I = International ❖

## Obituary

***We regret to inform the sad demise of the following:***

1) **Tmt. Sundari Bai, R** (81) LM: 602 passed away on 03.11.2015. ❖

2) **Shrimathi Duraikannu Ammal** (97) mother of our EC member Thiru V. Sainath LM: 834, passed away on 25.11.2015 ❖

***We convey our heartfelt condolence to the members of the bereaved family.***

## Welcome to Our Family Fold

**I. NEW LIFE MEMBERS**

LM: 915 Ph : 99407 56915 DOB : 15.11.1956
**Dr. V.V. Anantharaman,** MD
New No.172, Old No.376, Salai Street,
Ayyampet - 614 201.

LM: 916 Ph : 90477 72063 DOB : 10.01.1951
**Dr. K. Mani**
13/3 (O), 37/3 (N), SCP Flats, Chakrapani Street
Extension, West Mambalam, Chennai - 600 033. ❖

## Acknowledgment

Thanks a lot & God Bless You

**I. Sunshine Fund**

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru P. Vadivel Raman | LM : 130 | ₹ 501 |
| 2. | Thiru Balasubramaniam | LM : 669 | ₹ 300 |

***Note : AM/LM = Annual / Life Member JSL = Journal Subscriber Life***
***PM/DM/HM = Patron/Donor/Honorary Member*** ❖

## News from our Networking Associates

**SRI SANTHANAKRISHNA PADMAVATHI HEALTH, CARE & RESEARCH FOUNDATION celebrated 23rd ANNIVERSARY & ELDERS DAY,** on 3rd December 2015. The Chief Guest was Padmasri Dr VS. Natarajan. ❖

**FOSWL India, Chennai Anna Nagar** invites you for its monthly meeting at 5.00 P.M., on Sunday 20.12.15 at Karuna Enclave,SMF Annex, opp: Hotel Akshyam, Shanthi Colony, Anna Nagar, Chennai- 40. For details please contact : 93818 01446. ❖

**Probus Club of Chennai celebrated** Children's Day B/D of Pandit Nehru on 23.11.15 at Russian Cultural Centre, Alwarpet. Dr. (Maj.) Rajan, MD has the Chief Guest. ❖

**The Social Justice Bench of Supreme Court of India,** comprising Justices Madan B Lokur and UU Lalit said that revising the 1999 "National Policy of Older Persons" (NPOP),by Government of India, has become necessary in the wake of the enactment of the maintenance and welfare of parents and Senior Citizens Act, 2007. ❖

**President Mr. Pranab Mukherjee said, It is important that institutions** to provide geriatric care be established, strengthened and made more affordable for the common man, during a function organized by the Ministry of Social Justice and Empowerment to honour senior citizens on World Elders Day. Mukherjee also suggested changes by the Centre and at the state level in the legal framework to ensure safety and security of the elderly. " if found necessary, the legal provisions have to be re-visited and requisite modification carried out. ❖

***Courtesy : Voice of Senior Citizens***

Published by Dr. (Capt.) M. Singaraja, on behalf of Senior Citizens Bureau, at New No.90, Rama Naicken Street, Nungambakkam, Chennai - 600 034. Ph : 2823 1388. Printed by Srikalaivani at Sri Maruthy Laser Printers, 173, Peters Road, Royapettah, Chennai - 600 014. Ph : 2852 4256. Editor : Dr. (Capt.) M. Singaraja, Ph : 94441 27704 E-M : singaraja@gmail.com